News
aperin Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஷு ஐப்பசி மீ ச உ (1947 ஒக்டோபர் 21 செவ்வாய்க்கிழமை) [ இல ருரு

# கலைமகள் விழா

## மெய்ஞ்ஞானம் அருளும் வேதவல்லி

### அணுக்குண்டு யுகத்தில் அவள்கருணை வேண்டும்

### விஞ்ஞானிகளின் நாசவேலை

### அது நீங்கி மெய்ஞ்ஞானநெறி செல்லவேண்டும்



அகிலாண்டேஸ்வரியாம் அன்னையை நவராத்திரியின் கடைசி மூன்று இரவுகளிலும் கலைமகள் உருவமாக அகிலத்தார் ஆராதிப்பர். மக்கள் மனத்து மாசைப் போக்க, அந்தகாரத்தை நீக்க, ஞானம் கல்வி என்னும் விளக்குகளை அருள்பவள் கலைமகள்.

இது அணுக்குண்டு சகாப்தம்: உலகத்தை யார் முதல் நாசம் செய்வது என்பதில் உலக வல்லரசுகள் இன்று போட்டியிட்டு உள்ளொன்று வைத்துப் புறம்பொன்றுகதைக்கும் கொடிய காலம், மக்கள் மனத்தில் சதா பீதியும், பயமும் நடமாடும் காலம்.

உலக அரசியல் வாதிகளிடையே மெய்ஞ்ஞானம் உதிக்க வேண்டும். விஞ்ஞான ஆராய்ச்சி இன்று மிருக சக்தியின் அம்சமாக அழித்தற்றொழில்களுக்கே உபயோகமாகின்றது. இந்தக் கெடுதலான நிலைமை மாறி விஞ்ஞானம் ஆக்கற்றொழிலுக்குச் செலுத்தப்படல் வேண்டும். மக்களின் பஞ்சம், பசி, வறுமை என்பவற்றைப்போக்க விஞ்ஞானம் உபயோகிக்கப்படல் வேண்டும்.

கல்வித் தெய்வம் கலைமகள் கடாட்சம் அரசியல் வாதிகள்மீது செல்ல வேண்டும்எனப் பிரார்த்திப்போமாக. தர்மம், ஓங்க, அதர்மம் நீங்க, சத்தியம் வெல்ல, அசத்தியம் மாள, உண்மை ஞானத்தை யருளும் கலைத்தெய்வம், வெள்ளைக் கமலாசனியை வந்திப்போமாக.

“வெள்ளைக் கலையுடுத்து,
வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து
வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்து
அரசரோ டென்னைச்
சரியாசனம் வைத்த தாய்.

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—
[துடியிடையும்
அல்லும் பகலும் அநவரதமும் துதித்தாற்
கல்லும் சொல் லாதோ கவி.

# பிரார்த்தனை

வெள்ளித் தகட்டுநெட் டேடவிழ்த் தின்னிசை
விரும்புஞ் சுரும்பர் பாட
விளைநறவு கக்கும் பொலம்பொகுட் டலர்கமல
வீட்டுக் கொழித்தெ டுத்துத்
தெள்ளித் தெளிக்குந் தமிழ்க்கடலின் அன்பின்
ஐந்திணை எனவெடுத்த இறைநூற்
றெள்ளமுது கூட்டுணுமோர் வெள்ளோதி மத்தின்இரு
சீறடி முடிப்பம் வளர்பைங்
கிள்ளைக்கு மழலைப் பசுங்குதலை யொழுகுநீங்
கிளவியுங் களிம யிற்குக்
கிளரிளஞ் சாயலும் நவ்விக்கு நோக்கும்விரி
கிஞ்சுகச் சூட்டரச னப்
பிள்ளைக்கு மடநடையும் உடனுடு மகளிர்க்கோர்
பேதைமை யும்உதவி முதிராப்
பிள்ளைமையின் வள்ளன்மை கொள்ளுமொரு பாண்டிப்
பிராட்டியைக் காக்க என்றே.

—குமரகுருபரர்

# தமிழா! தலை நிமிர்!

## இன்னும் உறக்கம் வேண்டாம்

(C, T. சம்பந்தன், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

உலகெங்கும் முன்னேற்ற முழக்கம் கேட்கிறது. ஒவ்வொருதேசமும் ஒவ்வொரு சமூகமும் மின் வேகத்தில் முன்னேறத் துடிதுடிக்கின்றது. தனி மனிதனுக்கே சமூகப்பணி அவசியமாய்விட்டது. படித்துப் பட்டம் பெற்றுப் பணம் வாரிக்குவித்தவனைப் புகழ்ந்த உலகம், இன்று பொதுநலங் கருதிச் சமூக முன்னேற்றத்திற்கு உழைக்கும் உத்தமனையே போற்றி வந்து பாராட்டுகிறது.

இந்த விஷயத்தில் உலகம் வேறு; நந் தமிழ்நாடு வேறு; இந்த ஒரு வேற்றுமையினால்தான் இன்று எங்கள் தமிழ் இந்நிலையி லிருக்கிறது. அமேரிக்கா, ஐரோப்பா போன்ற மேலைத் தேசங்கள் உலகத்தின் கவனத்தை எப்படிக் கவர்கின்றன? அவைகளது சமூக வளர்ச்சியின் வேகமேவேகம்! தங்கள் நாட்டில்தோன்றும் அறிஞர்களை, கலைஞர்களை, விஞ்ஞானிகளை, விசேட சக்தி படைத்த எந்த மனிதனையும் ஆதரித்து ஆர்வமூட்டி அவர்களாலேயே தங்கள் நாட்டிற்கு அழியாத கலைச் செல்வங்களையும் குன்றாத புகழையும் பெற்றிருக்கின்றன, பெறுகின்றன. கலைஞர்களே நாட்டின் செல்வங்கள். அவர்கள்தான் மக்கள் வாழ்க்கையை உயர்த்துபவர்கள்; புனிதமாக்குபவர்கள்: மேலைத் தேசங்கள் தங்கள் கலைஞர்களைப்பாராட்டுவதில் சலியாத ஊக்கமுள்ளவர்கள். அத்தகைய அறிஞர்களை வெளி நாடுகட்கு அனுப்புகிறார்கள். அவர்கள் சென்றவிடமெல்லாம் தம் தாய்நாட்டின் பெருமையைநிலைநாட்டுகின்றனர். அதனால் அவர்கள் நாடு உலகிலேயே பெருமையடைகிறது.

இந்த உணர்ச்சி எங்கள் தமிழ்நாட்டின் எந்த மூலையிலும் இல்லையென்று சொல்லிவிடலாம், காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் எத்தனை அருமையான கலைஞர்கள் தோன்றுகிறார்கள். உலகுள்ளளவும் நாம் கௌரவப்படக்கூடிய கலைஞர்கள்எம்மிடை தோன்றவில்லையா? பின் ஏன் எங்கள் தமிழ் தாழவேண்டும்.

அந்த அமர பிறவிகளைச் சரியான முறையில்—அவர்கள் அருமை பெருமையை அறியாது உறங்கிக்கொண்டிருந்தோமே! தமிழிற்கே மறுமலர்ச்சி தந்து நாட்டிற்கே உணர்ச்சியூட்டிய வீர பாரதியார் கொடிய வறுமையால் வருந்தி மடிந்தாரே! இன்று “பாரதிக்கு....” என்றவுடன் குவியும் ரூபாய்கள்! எதையும் அந்தந்தக் காலத்தில் அறிந்து பலனை அடைவதே அறிவுடைமை!

அந்நிய ஆட்சியினாலும் கேவல ஆங்கில நாகரீகத்தாலும் தமிழ்நாடே அலங்கோலப்படுகிறது. எங்கள் நாடுந் தமிழும் இந் நிலையிலிருக்க நாம் உறங்கிக்கொண்டிருக்கவா?

நாட்டின் எழுச்சி நோக்கிப் புத்துணர்ச்சியூட்டிப் புதுயுகங் காண இளைஞர்கள்பலர் முன்வருகிறார்கள். சமய சமூக அரசியல்துறைகளில் நாட்டை முன்னேற்றத்தாமாக வரும் தேசிய உணர்ச்சி ததும்பும் இளைஞர்களை அன்புகாட்டி, ஆதரித்து அவர்களின் உயர்ந்த முயற்சிகளை பலனடையச் செய்வது எமது பொறுப்பு. இன்னோரன்ன லட்சியவாதிகளை அலட்சியஞ் செய்தால் நமது நாடு நலிவதற்கென்ன தடை? உலகோடு நமது நாடும் தோளோடு தோளாக முன்னேற வேண்டுமாயின் ஆற்றல்படைத்த நம் இளைஞர்களை ஆர்வமூட்டவேண்டும். நாளைய உலகம் இளைஞர்கையில்தானே?

இனித் தூங்கிக்கொண்டிருக்கக் காலமில்லை. மாணவர்களே தேச முன்னேற்ற அளவுகோல்கள்; மக்கள் வாழ்வை ஒளிபெறத் தூண்டும் உணர்ச்சிக் கோல்கள்; மாணவர்களே நாட்டைப் பிரகாசிக்கும் வெளிச்சக் குமிழிகள். அவர்கள் விழிப்புற்றால் நாடே விழிப்புறும்! பின் இன்னும் உறக்கமா?

# புதிய அரசியற் கட்சி

## அவசியம் நாட்டுக்கு வேண்டும்

[மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர்
திரு. வி. வீரசிங்கம் B. A. எழுதுகிறார்]

சோல்பெரி அரசியற் திட்டத்தின்கீழ் நடைபெற்ற முதலாவது தேர்தலிலிருந்து இலங்கையிலுள்ள கட்சி நிலைகளின்படி இத்திட்டம் இலங்கையில் கையாளுதற்குத் தகுதியுடையதன்று என்பது தெரிந்துவிட்டது. அரசாங்கத்தை நிலையுள்ளதாகச் செய்வதற்கு எந்தக் கட்சியும் தகுந்த பெரும்பான்மைக் கட்சியாகவில்லை. இரண்டு கட்சிகள் சேர்ந்து அரசாங்கத்தை நடத்துவதற்கே கட்சிகள் ஒத்துவரக்கூடிய அறிகுறிகளும் காணப்படவில்லை. நன்மைக்கோ தீமைக்கோ இலங்கையிற் காணப்படுவதுபோன்ற புதிஞெரு வெவ்வேறு கட்சிகளை உலகில் வேறுஎங்கும் நாம் காணக்கூடியதாயு மில்லை. எதிர்காலத்தில் இரண்டு காரியங்களை நாம் எதிர் பார்க்கக்கூடியதா யிருக்கிறது. ஒன்று அரசாங்கத்தின் நிலையின்மை; மற்றது இடதுசாரி அரசாங்கம் ஏற்படுவதற்குரிய தெளிவான குறிகள். இடதுசாரிக்கட்சியசர் மிக விரைவில் அதிகாரத்திற்கு வருவார்களானால் ஒரு புரட்சிதான் ஏற்படும். அரசாங்கத்தை நிலையுள்ளதாகச் செய்வதற்கும் இந்நாட்டு மக்களுடைய சமயம் கலாசாரம் ஆகியவற்றிற்குத் தீங்கு விளைக்கக்கூடிய பகுதிகளை நீக்கிவிடடுப் பொருளாதாரச் சமதர்மம் மாத்திரம் ஏற்படக்கூடியதாக நாட்டைத் தயாரிப்பதற்கும் ஒரு வழியைக் கண்டுபிடிப்பதற்கும், பொதுஜன நன்மையில்லாவிட்டாலும் சுயநலத்தை விரும்புகிற ஒவ்வொருவரும் விரும்புதல் வேண்டும். ஒத்துழைப்புக்கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்சி நிலையான அரசாங்கத்தை ஏற்படுத்துதற்கும், இரத்தம் சிந்துதல், உள்நாட்டுக் கலகம் என்னுமிவற்றைத் தடுத்தற்கும் நிச்சயமாகப் பெரிதும் உதவும். இந்தக் கொள்கையைப்பற்றிய பொதுஜன அபிப்பிராயத்தை நாம் வரவேற்கின்றோம். இந்தக் கொள்கையைப் பொதுவாக ஆதரிப்போரைக்கொண்ட ஒரு குழு இக்கட்சிகளின் கொள்கைகளைத் தெளிவுபடுத்திக்கொள்ளவும், கட்சி ஸ்தாபனத்திற்கு வேண்டிய நிகழ்ச்சிகளையும் விதிகளையும் அமைத்துக் கொள்வதற்குமாகக் கூட்டப்படும். இக்கட்சியை ஆதரிக்க விரும்புவோர் [illegible] தெரிவித்துக்கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேஷ விஞ்ஞாபனம்

வருகிற வெள்ளிக்கிழமை (24-10-47) விஜயதசமி விசேஷ தினங் காரணமாக இந்துசாதனுலயம் சைவப்பிரகாச யந்திரசாலைகளிற் கடமை பார்ப்போர்க்கு விடுமுறை உதவப்படுமாதலால், அத்தினத்தில் இந்துசாதன தமிழ் ஆங்கிலப் பிரசுரங்கள் வெளிவரா என்பதை அபிமானிகள் அவதானித்துக்கொள்க.

மனேஜர்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஹூ

ஐப்பசி ௪ ௨ செவ்வாய்க்கிழமை

## இலங்கைப் பாராளுமன்றப் பரிபாலனம்

இந்த இலங்கை நாட்டின் புதிய பாராளுமன்ற அரசியன் முறைப் பரிபாலனம் நிகழும் அக்டோபர் மாசம் 14-ந் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாயிற்று என்று சொல்லலாம் இலங்கைப் பாராளுமன்றமும் பிருத்தானிய பாராளுமன்றத்தின் பரிபாலன முறைக்கிசைய அமைந்த தென்றே கொள்ள வேண்டும். பாராளுமன்ற முறையிற் பரிபாலிக்கப்படும் நாட்டுமக்களுக்குப் பலவித சுதந்திரமுண்டென்பர். இவ்விலங்கை மக்களுக்கும் இக்காலந் தொட்டுப் பலவகையான சுதந்திரங்கள் கிடைக்கு மென்றே நாம் எதிர் எதிர்பார்க்கலாகும்.

இலங்கையிலே யுள்ள பிரதான சாதியார் சிங்களர் தமிழர் என்னும் இரு பகுப்பினராவர்; இஸ்லாமியர் பறங்கியர் ஐயிரோப்பியர் முதலானோர் காலந்தோறும் ஒவ்வொரு காரணம்பற்றி இங்கு வந்து குடியேறியவர்க ளென்பதை எவரும் ஏற்றுக்கொள்வர்; சிங்களர் தமிழர் என்னும் இந்த இரண்டு பகுப்பின ருள்ளும், முற்காலத்திலே தமிழர் சிஙகளராலும் சிங்களர் எல்லாள மகாராசன் போன்ற தமிழ் மன்னராலும் பரிபாலிக்கப்பட்ட சந்தர்ப்பங்களுமுண்டு; அதன்பின்னர்மத்திய இலங்கை சில நூற்றாண்டுகளுக்குப்பின் பிருத்தானியர் கைப்பட, இலங்கைத்தீவின் கடலோரத்துள்ள ஊர்களை முதற் பறங்கியரும் பின்னர் ஒல்லாந்தரும் ஆண்டுவந்தனர்; பின் வந்தவர்களாகிய பிருத்தானியரும் தொடக்கத்தில் அக்கரையோரங் கட்கு அதிகாரிகளா யிருந்து 1815-ம் ஆண்டில், கண்டிநகரை இராசதானியாகக் கொண்டு ராச்சிய பரிபாலனஞ் செய்த தமிழ் மன்னராகிய ஸ்ரீ விக்கிரமராசசிங்கனிடம் அம் மத்திய இலங்கையையும் அபகரித்து அக்காலந் தொட்டு இலங்கை முழுவதையும் பரிபாலிப்பராயினர்; பிருத்தானியருடைய பரிபாலனத்திலேயே இந்த இலங்கை பலவகையில் நன்மையையும் சீர்திருத்தத்தையும் அடைந்ததென்பது மறுக்கொணு உண்மை; பிருத்தானியர் இலங்கை மக்களுக்குக் காலந் தோறும் கொஞ்சங்கொஞ்சமாகச் சுவாதீனங்களைக் கொடுத்து, தங்கள் பரிபாலனத்தில் நூற்றைம்பது ஆண்டுகள்வரை சென்ற பின் ஒரு அளவிற்குத் தங்கள் நாட்டோடு ஒத்த சுவாதீனத்தை இந்த இலங்கை நாட்டிற்கும் இப்பொழுது உதவலாயினரெனச் சொல்லலாம்.

மேலே காட்டியபடி, இந்த இலங்கையில் இப்பொழுது பல சாதி மக்களுள் நீடித்த காலம் அந்நியருடைய ஆதிக்கத்துள் அகப்பட்டுக்கிடந்த தமிழரே சுயராச்சியத்தின் அருமையைப் பெரிதும் அறிந்துகொள்ளத்தக்கவ ரெனலாம். இலங்கை மக்களுட் சிங்களராக, தமிழராக, இஸ்லாமியராக, வேறு எச்சாதியினராக, பாராளுமன்றப் பரிபாலனம் கிடைத்தவுடன் தமிழர் முதலாகிய தொகையிற் குறைந்த சாதியினரும் தொகையிற்கூடிய சிங்கள சாதியினரும் ஒத்துழைப் பார்களென்ற கொள்கையும் இதனுல் நாட்டிற்குப் பெரும் நன்மையுண்டாகுமென்ற நோக்கமும் இலங்கை மக்களுட் பெரும்பாலா ரிடத்து இருந்த வெனலாம்; ஆனல் இந்த ஒற்றுமையும் ஒத்துழைப்பும் இப்போதைக்கு இலங்கை மக்களுக் கிடையே யுண்டாமோ என்ற சந்தேகம் இந்த நேரத்து எவர்மாட்டும் பிறக்கலாயிற்று. பரிபாலனப் பொறுப்பை வகித்த பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கிடையே ஒற்றுமையும் ஏகோபித்த நன்னேக்கமும் உண்டாகும்வரை, அப்பாராளுமன்றத்தினல் ஏதும் நன்மை யடையலாமெனக் காத்திருத்தல் வியர்த்தமாகும்.

பாராளு மன்றத்தவர்க்கிடையே கட்சிபேதமிருப்பினும், சிலசில விஷயங்களால் வேற்றுமையிருப்பினும், அவர்களாற் பரிபாலிக்கும் நாடு பல்லாற்றுனும் ஈட்டப்படுஞ் செல்வத்தோடு கூடியனவா யிருப்பின், அப்பேதங்களும் வேற்றுமைகளும் அந்நாட்டு மக்களுக்கு அதிக இடையூற்றை விளைக்கமாட்டா வெனலாம்; ஆனல் இந்த இலங்கையெனிலோ, இங்குள்ள மக்களின் நித்திய சீவியத்திற்கு இன்றியமையாப் பொருள்களுள் உப்புந் தேங்காயுமொழிய ஏனைய பொருள்களெல்லாவற்றிற்கும் அந்நிய நாடுகளையே எந்தநேரமும் எதிர்பார்த்தவண்ணமிருப்பது; இப்படியான தாரித்திரிய நிலையிலுள்ள இந் நாட்டிற்குக் கொடுக்கப்படும் சுயராச்சியம், நித்திய தரித்திரனுக்குக் கொடுக்கப்பட்ட சுயாதீனம்போல் எவ்வகையான பயனுஞ் செய்யாதெனலாம். ஆதலினல், இலங்கை மக்கள் உண்மையான சுயாதீனத்தைப் பெற வேண்டுமானல், விவசாயம், வியாபாரம், கைத்தொழில், கல்வி யென்னுமிவைகள் விருத்தியடைதல்வேண்டும். நாட்டையாளும் பெரும் பொறுப்பை இப்பொழுது ஏற்றுக்கொண்டவர்களாகிய பாராளுமன்றத்தினர், கட்சி பேதம் பாராட்டுவதையும் குரோதங் கொள்வதையும் அதிகாரப் பேற்றையும் அறவே விடுத்து மறந்து, ஒரே மனசினராய், நாட்டின் ஈடேற்றத்தை உத்தேசித்து ஒத்துழைத்தல் வேண்டும்; அரசாங்க சபைப் பரிபாலன காலத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் சிற்சில விவசாய முயற்சிக்கேதுவான வழிகளையும், கைத்தொழிலுக்கு அநுகூலமான திட்டங்களையும் இட்டிருந்தார்கள்; அவைகளைக் காலதாமசமின்றிப் பராளுமன்றத்தார் இப்பொழுதே ஆரம்பித்து நடைபெறச் செய்தல்வேண்டும். இந்த வடமாகாணத்திலும் நிலாவரை முதலிய வற்று நீர்நிலைகளிலிருந்து நீர்ப்பாய்ச்சி விவசாயத் தொழிலை விருத்திசெய்தற்கும், காங்கேயன்றுறையில் ஒரு பெரிய சீமெந்துத் தொழிற்சாலையைத் தாபித்து இலங்கைநாடு முழுவதற்கும் "சீமெந்து" கொடுக்கவும் எஞ்சிய சீமெந்தை வேற்று நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வியாபாரவாயிலாகப் பொருளீட்டவும், திட்டமிட் டிருந்தார்கள்; அத்திட்டங்களை யெல்லாம் புதிய பாராளுமன்றத்தினர் நிறைவேற்றுதற்காகிய முயற்சிகளைச் செய்தல் வேண்டும்; இப்படிச் செய்யத் தொடங்குவதனுல் இவ்விலங்கை மக்களுக்கிடையேயுள்ள சில விபரீதவிளக்கமும் சந்தேகங்களும் அவர்களை விட்டகலும். நாடு செல்வத்தை யடைய, மக்களுஞ் சிறந்த சுவாதீனத்தை அநுபவிக்கும் நிலைமையை யடைய, எதிர்க்கட்சியினரென்றிருப்பவர்கள் பரிபாலனத்தை மேன்மேலும் நல்லமுறையி லாக்குவதற்கான முயற்சிகளைச் செய்யலாகும்.

## ஆசியாத் தொழிலாளர் மகாநாடு

ஆசியத் தொழிலாளர் மகாநாடு இந்த அக்டோபர் மாதம் 27-ம் திகதி தொடக்கம் நவம்பர்மாதம் 6-ந் திகதிவரை புதுடெல்கியில் நிகழும். அந்த மகாநாட்டிற் பங்குபற்றுதற்காக, பண்டிதர் நேருவின் அழைப்புக் கிணங்கி ஸ்ரீ ஜாத் வி. வி. கிரி சென்ற வியாழக்கிழமை இந்தியாவுக்குப் பிரயாணமானுர்.

குறித்த மகாநாட்டுக்கு இலங்கையிலிருந்து மிஸ்ரர் ஆர். ஈ ஜெயத்திலக (தொழிலாளர் சார்பாக) மிஸ்ரர் வி. எச், சஸ. பர்ணாண்டோ (முதலாளிமார் சார்பாற், எனபவர்களும் இன்னுஞ் சிலரும் செல்வராம்.

## தேகவியோகம்

### திரு. சி. சபாரத்தினம்

யாழ்ப்பாணம் அரசினர் காணிப் பதிவுக் கந்தோரில் 37 வருட காலமாக இலேககராகக் கடமைபார்த்தவரும், யாழ்ப்பாணம் சரசுவதிவிலாச சபையில் ஆசிக நடிகராக விளங்கியவரும், இங்குள்ள சைவ பரிபாலன சபையிற் சில வருடங்கட்கு முன்னர் அங்கத்தவராகச் சேர்ந்து மரணபரியந்தம் நிர்வாகசபை அங்கத்தவராகவிருந்தவரும், தெய்வபக்தி சமயத் தொண்டில் அபிமானம் முதலிய நற்செயல்களோடும் சற் கருமங்களோடும் கூடியவருமாகிய திரு.சின்னையா சபாரத்தினமவர்கள் வண் வடமேற்குக் குளங்கரையிலுள்ள தமது இல்லத்திலே, தம்மைச் சில நாட்களாகப் பீடித்துவருத்திய சுவாசநோய் காரணமாக சென்ற ஞாயிற்றுக் ராஜரிஐ இரவு இரண்டுமணிவரையில், தமது மனைவிமக்கள், சகோதரர் மருகர் பேரப்பிள்ளைகள் ஏனைய சுற்றமித்திரர் பிரலாபமுற இவ்வுலக வாழ்வையொருவினர்; இவருக்கு இறக்கும்போது வயசு 67; இவரது சமக்கடன்கள் சென்றதிங்கட்கிழமைகோம்பயன் மணல் மயானத்தில் இவரது புதல்வரும் யாழ்ப்பாணக் கச்சேரியில் உத்தியோகம் வகித்திருப்பவருமாகிய திரு. அமிர்தலிங்கமவர்களால் நூற்றுக் கணக்கான சுற்றமித்திரர் சமுகத்திற் சிறப்பாகச் செய்யப்பட்டன; இவருடையபிரிவு பெரிதும் அநுதாபப்படத்தக்கது; இவரது ஆன்மா சாந்தியடைவதாக.

### விற்பனைக்கு

**1 பிலிப்ஸ்-6 வால்வ் ரேடியோ**
(புத்தம் புதியதுபோன்றது)
ரூபா 450-00

**1 எலக்ரோலக்ஸ் —பிரிஜிரேற்றர்**
(பொருள்களைக் காற்றுப் படாமற் பாதுகாப்பது)
பெரிய அளவு; மண்ணெண்ணெயினல் இயக்கப்படுவது
ரூபா 1000-00

**1 பியானே**
(கிறேமர்—லண்டன்)
ரூபா 600-00

பின்வருவோரிடம் அறிக:
டக்ரர் ரீ. பி. தாமோதரம்
21.கச்சேரி, நல்லூர்றேட், யாழ்ப்பாணம்

Edt 161 21 & 28-10-47

உ
கணபதிதுணை

## விவாக விஞ்ஞாபனம்

### கனகரத்தினம் — மனேன்மணி

திருவருளை முன்னிட்டு நிகழும் ஐப்பசி மாசம் 10-ந் திகதி (27—10—47) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 4½ மணிவரையில்வரும் சுபமுகூர்த்தத்தில் வண்மேற்கு திரு. க. குணரத்தினம் அவர்களின் புதல்வர் திருவளர் செல்வன் கனகரத்தினம் அவர்களுக்கும், வண்மேற்கு அப்பாபிள்ளை கனகசபாபதி அவர்களின் புதல்வி திருவளர் செல்வி மனேன்மணிக்கும், மணமகள் இல்லத்திற்றனே விவாகம் நடத்தி வைக்கப் பெரியோர் நிச்சயித்திருப்பதால் அச்சமயம் சுற்றமித்திரர் சகிதமாகச் சமுகஞ்செய்து தம்பதிகளை ஆசி செய்யுமவண்ணம் அன்பர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

☞ [ பிரத்தியேகமான அழைப்புப் பத்திரம் அனுப்பவில்லை ]

வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.
21-10-47.

அ. கனகசபாபதி
மணமகளின் பிதா

M 163 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செனேற் சபைத் தெரிவில் ஏமாற்றம்

## சேனநாயக்கா அதிகாரம் நிலைக்குமா?

### எதிர்க் கட்சிகளுக்கிடையே பிளவு

[ நமது அரசியல் நிருபர் எழுதுகிறார் ]

பாராளுமன்றத்தின் மேற்சபைக்குப் பிரதிநிதிகள் சபையினர் தாம் தெரிய வேண்டிய 15 பேரையும் தெரிந்துவிட்டனர். பிரதிநிதிகள் சபையே அதிக அதிகாரம் பெற்றுள்ளதென்றாலும், "செனேற்" சபை பெயருக்கு மாத்திரம் உள்ளதல்ல. பிரதிநிதிகள்சபை கொண்டுவரும் தீர்மானங்களைத் தாமதப்படுத்த இச்சபைக்கு அதிகாரம் உண்டு. அத்துடன் தானே புதிய தீர்மானங்களை எடுத்தாளவும் இச்சபைக்கு உரிமையுண்டு. எனவே பிரதிநிதிகள்சபை, நாட்டின் நிருவாகத்தில் எவ்வளவு பிரதானமானதோ, அவ்வளவு பிரதானமாக செனேற்சபையும் சோல்பெரித்திட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதன் பிரதிநிதிகள் சிறந்த அரசியல் வல்லுனராகவும், மதிப்புக்குரியராகவும் இருத்தல் வேண்டியதவசியம். ஆனால் ஜனப்பிரதிநிதிகள்சபை தெரிந்தெடுத்த பிரதிநிதிகளைப்பற்றிச் சொல்லுமிடத்து, இலங்கை மக்கள் அவ்வளவு திருப்திபடக்கூடிய ஏதுவில்லை என்றே சொல்லவேண்டும். ஐ. தே. கட்சியினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் கடந்த பொதுத்தேர்தலில் தம் கட்டுப்பணத்தையுமிழந்தவர். அத்துடன், தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும், மிகவும் கேவலமான முறையில் வகுப்புவாத நஞ்சைக் கக்கிய பெருமகன். இன்னும் ஒருவர் அவரைப்போலத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டவர். இப்படியாகப் பொதுஜன நம்பிக்கையை இழந்தவர்களை செனேற் சபைக்குப் பிரதிநிதிகள்சபை தெரிந்தெடுத்தது அச்சபையின் கௌரவத்துக்கே ஓர் இழுக்காகும் என்பதே பலரதும் அபிப்பிராயமாகும். ஏனைய செனேற் அங்கத்தவர்களைப்பற்றிச் சொல்லுமிடத்தும், இந்த நாடு அவ்வளவு பெருமைப்படக்கூடியதாயில்லை என்பதைத் தெரிவிக்கவேண்டியிருக்கிறது.

O

### ஏமாற்றந்தான்

தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதிகளின் தெரிவும் தமிழ் மக்களுக்கு ஓரளவு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது என்பதைமறுப்பதற்கில்லை. தமிழ்க்காங்கிரசின் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்ட டக்ரர் ஈ. எம். வீ. நாகநாதன், தமிழ்க்காங்கிரசின் காரியதரிசியாக இருந்து அதன் விருத்தியிற் பல தொண்டுகள் ஆற்றியவர் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அவர் பொதுஜனங்களுக்குப் புதியவர்தான். வடமாகாணத்திலே தமிழ்க்காங்கிரசின் அபரிமித வெற்றிக்கு மூலகாரணர் ஸ்ரீமான் சிவகுருநாதர் என்பதை எவரும் மறுக்கமுடியாது. வயது அறிவு, அநுபவம், ஆற்றல், என்பவற்றுடன் சாந்தகுணமும் எதிரிகளைத்தானும் தமது இனிய மொழிகளால் வசீகரப்படுத்தும் தன்மையும் உள்ள ஸ்ரீமான் சிவகுருநாதர் மேற்சபைக்குத் தெரியப்பட்டிருந்தால் தமிழ்க்காங்கிரசின் எதிர்காலம் மிகவும் சிறப்பாயிருந்திருக்கும் என்பதே எனது நம்பிக்கை. துரதிர்ஷ்டவசமாக தமிழ்க்காங்கிரசைப்பற்றிய ஓர் தப்பபிப்பிராயம் சிங்களத் தலைவர்கள் மனத்தில் ஏற்பட்டிருக்கிறது. சேனநாயக்கா அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக ஓர் சில சிங்களத் தலைவர்கள் தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பை இப்போது நாடலாம். ஆனால் அவர்கள் நாடும் ஒத்துழைப்பு சாஸ்வதமானதோ என்பது சந்தேகம். இப்போது தமிழ்க்காங்கிரசிற்கும் ஓர் சில அரசியற் கட்சிகளுக்குமிடையே யுள்ள ஒத்துழைப்பு கேவலம் ராஜதந்திரத்தை ஆதாரமாகக் கொண்டது. இந்நிலை மாறி, பரஸ்பரம் நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்ட ஒத்துழைப்பு ஏற்படவேண்டும். அப்படியான ஒத்துழைப்பு ஏற்படுதற்கு ஸ்ரீமான் சிவகுருநாதர் போன்றோர் செனேற்சபையிலாவது இடம்பெற்றிருக்க வேண்டும். விதண்டாவாதங்களைக் கக்கும் பிரசங்கங்களால் இனித்தமிழ்மக்கள் உஜ்ஜீவிக்க முடியாது பரந்த நோக்கமும், சிறந்த அரசியல் ஞானமும் உடையவர்களே இனித் தமிழர்க்கு வேண்டியவர்கள்.

O

### சமசமாஜிகள் குட்டிக்கரணம்

இந்தியப்பிரச்சினை விஷயமாகச் சமசமாஜிகள் ஓர் குட்டிக்கரணம்போடத் தம்மைத் தயார்செய்து வருகிறார்கள். இலங்கைக்கு இந்தியர் வருகையைக் கட்டுப்படுத்தவொண்ணாது என்ற சித்தாந்தம் கொண்டிருந்த சமசமாஜிகள் இன்று சிங்களப் பொதுஜன அபிப்பிராயத்துக்கு அஞ்சி, இந்தியர் வருகையைக் கட்டுப்படுத்தவே வேண்டும் என்று தம் கொள்கையை மாற்றப்போகின்றனராம். தம் கொள்கையை மாற்றாவிட்டால், அடுத்த தெரிவில் மண்கவ்வவேண்டும் என்ற பயமே இக் குட்டிக்கரணத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

O

### அரசாங்கம் கவிழ்ந்துவிடுமா?

சேனநாயக்கா அரசாங்கம் கவிழ்ந்துவிடுமா? அல்லது வரையறுக்கப்பட்ட காலம்வரைக்கும் அரசியலை நடாத்துமா? இந்தக் கேள்வி இன்று எவர் மனத்திலும் கிளம்பியுள்ளது. கூடிய சீக்கிரம் சேனநாயக்கா அரசாங்கம் அழிந்துவிடும் என்று ஓர்சாரார் கூறுவர். ஆனால் பிரதிநிதிகள் சபைத்தலைவர் தெரிவின் முடிவை அவதானிக்குமிடத்து இவர்களின் எண்ணம் பலிக்காது என்று தெரிகிறது. ஐ. தே. கட்சி அபேட்சகராக மிஸ்ரர் ஏ. எப். மொலமூரே நிறுத்தப்பட்டார். அவர்க்கெதிராக, இலங்கையின் சிறந்த நியாயவாதிகளில் ஒருவராய மிஸ்ரர் ஸ்ரீநிஸங்காவை எதிர்க்கட்சியினர் நிறுத்தினர் ஈற்றில் மிஸ்ரர் மொலமூரே 17 அதிகபடியான வாக்குச் சம்மதங்களால் வெற்றிபெற்றார். உபதலைவர் தெரிவிலும் ஐ. தே. கட்சி அபேட்சகரே வெற்றிபெற்றார். ஆனால் அவர் பெற்ற வாக்குக்கள் மிஸ்ரர் மொலமூரேயின் வாக்குக்களைப்போல அவ்வளவு அதிகமானதல்ல. காரணம் இவர் கொழும்பு மேயராக இருந்தகாலத்தில் கொஞ்சம் பகையைச் சம்பாதித்துவிட்டார். அந்தப் பகையை இத்தேர்தலில் சிலர் சாதித்துக்காட்டியும் அவர் வெற்றிபெற்றார். நிருவாகசபைகளின் உபதலைவராக மிஸ்ரர் ஜே. ஏ. மாட்டின்ஸ என்பவரை அரசாங்கம் நிறுத்தியது. அவர்க்கெதிராக எதிர்க்கட்சி எவரையும் நிறுத்தவேயில்லை.

O

### அதிகாரமும் செல்வாக்கும்

வெள்ளம் பள்ளத்தை நாடுவது இயல்பு. எங்கு அதிகாரமும் செல்வாக்கும் உண்டோ, அங்கே மனிதர் நாடுவது இயல்பு. அதேபோல இன்று சேனநாயக்கா அரசாங்கத்திடம் அதிகாரமும் செல்வாக்கும் உண்டு. இந்த அதிகாரம், செல்வாக்கு என்னும் தேனில் மொய்ப்பதற்கு பிரதிநிதிகள் சபையில் உள்ள சுயேச்சைவாதிகள் என்னும் ஈக்கள் காத்துக்கொண்டிருக்கின்றன. இன்னும், சேனநாயக்கா அரசாங்கம் கவிழ்ந்தால், மிஸ்ரர் சேனநாயக்கா தமக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு, பாராளுமன்றத்தைக் கலைத்துப் புதுத்தேர்தல் நடத்தும்படி தேசாதிபதிக்கு ஆலோசனை கூறினால், இச் சுயேச்சைவாதிகளில் எத்தனைபேர் பொதுத்தேர்தலில் நிற்கத்தயாராகநிற்கின்றனர்? சுயேச்சைவாதிகள் மாத்திரமல்ல. சமசமாஜிகள் முதலாம் இடதுசாரிகள் தானும் தயாரா? சமசமாஜிகளுக்குவிரோதமான பிரசாரம் இப்போது மிகவும் மும்முரமாகச் சிங்கள நாடுகளில் நடைபெறுகின்றது. இலங்கையிலே இந்திய மக்கள் குடியேறி சிங்கள மக்களின் கஞ்சியைத் தட்டிப் பறித்துக் குடிப்பதற்கு உதவி செய்பவர்கள் சமசமாஜிகள்தான் என்ற முறையில் பாமர சிங்கள மக்களுக்குத் தினமும் இன்று உபதேசம் செய்யப்படுகின்றது. வகுப்புவாதப் பிரசாரத்தைப் போல[illegible] இதன் [illegible] மெல்லமெல்லவாக வகுப்புத் துவேஷம் கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் பொதுத் தேர்தல் நிசமுமானால் சமசமாஜிகள்தானும் தங்கள் வெற்றியில் நம்பிக்கை கொள்ளமுடியாது. சுருங்கச் சொல்லுங்கால் பொதுத் தேர்தலை இன்னோர் முறைவிரும்பும் பாராளுமன்றத்தவர் அநேகர் இருக்கமாட்டார்கள். இந்தப் பொதுத் தேர்தல் என்னும் உம்மாண்டி மிஸ்ரர் சேனநாயக்காவின் அதிகாரத்திலிருக்கும் வரை அவர் இன்னும் 5 வருஷங்களுக்குக் குஷியாக அரசாங்கத்தை நடத்தலாம். 5 வருஷத்துக்கல்ல, 10 வருஷத்துக்கும் மிஸ்ரர் சேனநாயக்கா அதிகாரம் வகிக்கலாம் என்று ஓர் உயர்தர உத்தியோகத்தர் கூறியதாக மிஸ்ரர் எஸ். ஜே. கே. கிறவுதர் ரைம்ஸ் பத்திரிகையில் எழுதுகிறார். இன்னும் 5 வருஷத்தால் ஓர் யுத்தம் நிகழலாம்; அந்தக் காரணத்தை வைத்துக் கொண்டு சேனநாயக்கா அரசாங்கம் ஆும் மாள்மடித்தால் கேட்பது யார்?

O

### இன்னும் படிக்கவில்லை

கடந்த தேர்தலுக்குப் பிறகாவது சேனநாயக்காக் கோஷ்டி பாடம் படித்ததாகத் தெரியவில்லை. அவர்களுடைய நடவடிக்கை இன்னும் சர்வாதிகார த்வனியிலேயே இருக்கிறது. சென்ற சில மாதங்களுக்கு முன் வேலைநிறுத்தம் செய்த அரசாங்கக் கிளார்க்குமார்மீது அரசாங்கம் வஞ்சம் தீர்க்க முனைந்திருப்பதாகத் தெரிகிறது. இந்தக் கிளார்க்மாரின் பரிதாப நிலையை டக்ரர் என். எம். பெரீரா சென்ற வெள்ளிக்கிழமை மிஸ்ரர் சேனநாயக்காவுக்கெடுத்துரைத்து, பாராளுமன்றம் கூடி ஓர் தீர்ப்புச் செய்யமுன் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று டக்ரர் பெரீரா பிரதமரைக் கேட்டாராம். இவ்விஷயம் பகிரங்க உத்தியோகத்தரை மேற்பார்வை செய்யும் சபையைச் சேர்ந்தது. ஆனபடியால் தான் அச்சபையினர் செய்யும ஒழுங்கு நடவடிக்கைகள் விஷயமாகப் பிரவேசிக்க இஷ்டமில்லை என்று பிரதமர் கைவிரித்துவிட்டாராம்.

O

### எதிர்க்கட்சிப் பிளவு

எதிர்க்கட்சியில் உள்ளவர்களுக்கிடையே ஓர் பொதுத்தலைவரைத் தெரிவுசெய்யும் விஷயத்தில் இன்னும் ஓர் முடிவு ஏற்படவில்லை இப்போது எதிர்க் கட்சிகள் எல்லாமாக 6 உண்டு; அவையாவன சமசமாஜக் கட்சி, போல்ஷெவிக் லெனின் கட்சி, சமதர்மக் கட்சி, தமிழ்க்காங்கிரஸ், இந்தியக் காங்கிரஸ், இலங்கா சுவாதீனக் கட்சி. இந்த ஆறு கட்சியினரும் சேர்ந்து தமக்குப் பொதுவாக ஒரு தலைவரை நியமித்தால் பாராளுமன்றது வேலை சுலபமாகிவிடும் என்று பிரதிநிதிகள் சபை மூப்பனார் மிஸ்ரர் பண்டாரநாயக்கா ஓலம்போடுகிறார். பாராளுமன்றக் கூட்டம் ஆரம்பமாகமுன் அங்கே நிகழும் கரும நிகழ்ச்சிக்கிரமத்தை வகுப்பதற்கு, எதிர்க் கட்சித் தலைவருடன் சபைமூப்பனார் கலந்தாலோசிக்கவேண்டும் என்ற ஓர் சம்பிரதாயம் உண்டு. அதன்படி வருகிற மாதம் கூடும் பிரதிநிதிகள் சபை நிகழ்ச்சிக் கிரமத்தை வகுக்கமுன் மேற்படி சபை மூப்பனாராய மிஸ்ரர் பண்டாரநாயக்கா, ஓர் எதிர்க்கட்சித் தலைவரில்லாதபடியால் அங்குள்ள 6 கட்சித் தலைவருடனும் ஆலோசனை செய்யவேண்டியிருக்கிறது. அப்படி ஆலோசனை செய்யும்போது அவர்களுக்கிடையே அபிப்பிராய ஒற்றுமை ஏற்படாவிட்டால் நடப்பது என்ன? இது தான் மிஸ்ரர் பண்டாரநாயக்காவின் இன்றைய தலைவலி.

---

### ருஷியாமீது சீற்றம்

## அரபுப் பத்திரிகைகளின் ஆத்திரம்

பலஸ்தீனப் பிரச்சினை விஷயமாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் ருஷியாகைக்கொண்ட கொள்கை அரபு நாடுகளுக்குப் பெரும் ஏமாற்றத்தை விளைத்திருக்கிறது. ருஷியா இந்த விஷயத்தில் அரபு நாடுகளுக்குச் சாதகமாகவே நிற்கும், அமெரிக்காவுடன் எதிரிடை கட்டுதற்காகவேனும் அது யூதர்க்கு விரோதமாகப் பலஸ்தீன விவாதத்தில் நிற்கும் என்று அராபியர் காத்திருந்தனர்.

அராபியப் பத்திரிகைகள் இப்போது ருஷியாவைக் கண்டபடி திட்டவாரம்பித்துவிட்டன. எகிப்தியப் பத்திரிகைகள் ருஷயா ஓர் சூதாடி என்றும் அரசியற் பேராசை பிடித்த சூழ்ச்சிக்கார நாடென்றும் கூறுகின்றன. ருஷியா, அமெரிக்கா போன்ற ஏகாதிபத்தியத் திமிர் பிடித்த நாடுகளை கீழைத் தேயங்கள் இனியும் நம்பியிருக்கவொண்ணாது, கீழை நாடுகள் அனைத்தும் தம் பலமே தமக்குதவி என்ற உண்மையை உணர்ந்து ருஷியா போன்ற நாடுகளின் மாயவலையில்விழாமல் இருந்துகொள்ளவேண்டுமென்று எகிப்தியப் பத்திரிகைகள் கூறுகின்றன.

---

# உண்மையே தெய்வம்

## அதனைக்காணும் வழி : பூரண அஹிம்சை

மகாத்மா காந்தி தமது சரித்திரத்தின் கடைசி அத்தியாயத்தின் இறுதியில் கூறுகிறார்:

எனது ஒரே தன்மையான அநுபவத்தில் உண்மையைத் தவிர வேறு தெய்வம் இல்லை யென்று எனக்கு விளங்கி யிருக்கிறது. எனது சரித்திரத்தின் ஒவ்வொரு பக்கமும் உண்மையை அறிவதற்கு ஒரேவழி அஹிம்சை என்பதைத் தெளிவாக விளக்காவிட்டால், நான் இத்தனை அத்தியாயம் எழுதியதில் மேற்கொண்ட உழைப்பு வீணென்று கருதுவேன். அந்த விஷயத்தில் எனது முயற்சிகள் பயனற்றதாய்ப் போயினும், அந்தப் பெருங் கொள்கையில் தவறில்லை யென்றும், சாதனங்களே தவறுயிருக்கு மென்றும் வாசகர்கள் அறிய வேண்டும். அஹிம்சையில் எனது நாட்டம் எவ்வளவு உண்மையானதா யிருந்தபோதிலும், அது இன்னும் பூரணமற்றதாயும் போதாததாயுமே இருந்திருக்கின்றது. உண்மையைப்பற்றி நான் காணமுடிந்த மிக அற்பமான வெளிச்சம் நாம் நாள்தோறும் காண்கின்ற சூரியனின் ஒளியைவிடக் கோடிமடங்கு பேரொளி பொருந்தியது உண்மைச் சோதியின் சொல்லொணுத் தேவ ஒளியின் பெருமையை விளக்கமுடியாது. உண்மையில் நான் கண்டது அந்தப் [illegible]தியின் ஒரு சிறியமினுக்[illegible]ஆகும். ஆனால் ஒன்று மட்டும் எனது அநுபவங்களின்பயனாக நான் உறுதியாகச் சொல்லக்கூடும். அஹிம்சையை முற்றிலும் கைக்கொண்ட பின்னரே உண்மையைப் பூரணமாகக் காணக்கூடும்.

எங்கும் நிறைந்த உண்மையை நேருக்கு நேராகக் காண்பதற்குக் கடவுட் படைப்பில் மிகவும் அற்பமான பிராணிமீதும் தன்னைப்போல வேஒருவன் அன்புபாராட்டவேண்டும் அதில் நாட்டம் கொள்ளும் ஒருவன் வாழ்க்கையில் எந்தத் துறையையும் விட்டு விலகி யிருக்க முடியாது. எனது உண்மை நாட்டமே அரசியல் துறையில் என்னை இழுத்தது. சமயத்திற்கும், அரசியலுக்கும சம்பந்தம் இல்லை யென்று சொல்லுகிறவர்கள் சமயம் இன்னதென்று அறியார்கள் என்று சிறிதும் ஐயப் பாடின்றி, ஆனால் மிகுந்த பணிவுடன் நான் சொல்வேன்.

உலகத்தில் வாழும் ஒவ்வோர் உயிருடனும் ஒன்றுபட்டு வாழ ஆத்மசுத்தியின்றி முடியாத காரியம். ஆத்மசுத்தியின்றி அஹிம்சை நெறியில் ஒழுகுதல் வெறுங் கனவே யாகும். உள்ளத் தூய்மையின்றி ஒருவன் கடவுளை ஒருநாளும் காணமுடியாது. எனவே ஒருவன் தன்னைப் புனிதப் படுத்துவது என்றால், வாழ்க்கையின் சகல துறைகளிலும், சுத்தப்படுத்துதலாகும். ஒருவன் தன்னைச் சுத்தப் படுத்தும்பொழுது தன்னைச் சுற்றி

தொடர்ச்சி 4 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

புதன் அக்டோபர் 22

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 வேதாரண்யம் எஸ் கிருஷ்ணமூர்த்திஐயர் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலைஇசை இசைத்தட்டு 8-30 டி சுப்பிரமணிய தேசிகர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 வேதாரண்யம் எஸ் கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 2 தமிழில் செய்திகள் 2 05 வேதாரண்யம் எஸ் கிருஷ்ண மூர்த்தி ஐயர் வயலின் 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 டி சுப்பிரமணியதேசிகர் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ர கானம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 மதுவிலக்கு 8 ஜீவகன் நாடகம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப் பேச்சு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 ஐரோப்பிய சங்கீதம் இசைத்தட்டு 10 30 முடிவு.

வியாழன் அக்டோபர் 23

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 கே வி பக்கிரிசாமி பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலைஇசை இசைத்தட்டு 8 30 ஆர் ஷண்முகவல்லி அம்மாள்பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 குரலவகை இசைத்தட்டு 2 15 கல்விஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 கே வி பக்கிரிசாமிபிள்ளை பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7 15 செய்தி விளக்கம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 பட்டமங்கலம் வ சாம்பசிவ ஐயர் வீணை 8 15 ஜி எஸ் பாலசுப்பிரமணியம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 எம் கே தியாகராஜ பாகவதர் இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 பட்டமங்கலம் வ சாமப ஐயர் வீணை 10 30 முடிவு.

வெள்ளி அக்டோபர் 24

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7-30 தஞ்சாவூர் ஜானகி அம்மாள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்யகோஷ்டி 8 30 வ பாலகிருஷ்ணன் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில்செய்திகள் 1 40 தஞ்சாவூர் ஜானகியம்மாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 வ பாலகிருஷ்ணன் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 சமயபுரம் சுந்தரேசபிள்ளை நாகஸ்வரம் 5 40 குரான் ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சமயபுரம் சுந்தரேசபிள்ளை நாகஸ்வரம் 7 15 நூத் உல் ஸஹறா 7-30 தமிழில் செய்திகள் 7 45 நமது தபால்பெட்டி 8 ஆதிபராசக்தி சங்கீத உபந்நியாசம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 தென்னிந்தியநாட்டுப் பாடல்கள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் 9 45 சித்திரகானம் இசைத்தட்டு 10 நீங்கள் கேட்டவை 10 30 முடிவு.

சனி அக்டோபர் 25

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 டி கே லட்சுமணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8·15 கோடகநல்லூர் எஸ் சுந்தரம் ஐயர் வயலின 8 30 காலை இசை இசைத்தட்டு 9 முடிவு.

1 கோடகநல்லூர் எஸ் சுந்தரய்யர் வயலின் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2 05 சர்வ கலாசாலைகளுக்குக் குறிப்பு 2 15 எம் கோமளம் எஸ் ஸ்ரீனிவாஸ் பாட்டு 2 45 முடிவு,

மாலை 5 டி கே லட்சுமணன் பாட்டு 5 40 பெரியபுராண விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 எஸ் கோமளம் எஸ ஸ்ரீனிவாஸ் பாட்டு 7 15 ராணுவத்திலிருந்து திரும்புவோருக்கு வசதிகள் 7 30 தமிழில் செய்திகள் 7 45 எம் எம் தண்டபாணிதேசிகர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 பிடாரன்மகன் நாடகம் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 டி வி கிருஷ்ணமூர்த்தி பாட்டு 10 இசை வேளை இசைத்தட்டு 10 30 முடிவு

ஞாயிறு அக்டோபர் 26

7 15 கீதாரம்பம் 7 29 தமிழில் செய்திகள் 7 30 ஆர் ராஜம், ஆர் சரஸ்வதி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை 8 30 ஆர் ஷண்முகம்பிள்ளை வீணை 9 முடிவு.

12 கதம்பம் 12 30 திரிகூடம் 12 35 ஊர்வாயும் உலைமூடியும் 12 45 யான்பெற்ற இன்பம் 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 சாவித்ரி கணேசன் 2 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2 30 நீங்கள் கேட்டவை 3 முடிவு

5 ஆர் ஷண்முகசுந்தரம்பிள்ளை வீணை 5 40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 30 தமிழில்செய்திகள் 745 புத்தக விமர்சனம் 8 டி ஜி சங்கரகோபாலன் புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 எஸ ஜி கிட்டப்பா 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் 9 46 பியானோ ஸாக்ஸபோன் 10 இசைவேளை 10 50 முடிவு.

திங்கள் அக்டோபர் 27

7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 கருப்பூர் எஸ்குருசாமிபிள்ளை நாகஸ்வரம் 3 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 புதிய பாடல்கள் 8 30 கல்லிடைக் குறிச்சி வ பாலசுப்ரமணிய பாகவதர் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 ஜி என் ராஜகோகிலம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 ஜி என் ராஜகோகிலம் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

5 கருப்பூர் எஸ் குருசாமிபிள்ளை நாகஸ்வரம் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 வி சந்தானமய்யா வயலின் 7 30 தமிழில் செய்திகள் 7 45 உழவர்க்குத் துணை 8 கல்லிடைக் குறிச்சி வ பாலசுப்ரமணிய பாகவதர் பாட்டு 8 30 வி சந்தானமய்யா வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் 9 45 அப்துல்கனி 10 இசைவேளை 10 40 முடிவு

செவ்வாய் அக்டோபர் 28

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள 7 30 திருக்கண்ணபுரம் எஸ் ஸ்ரீனிவாசபிள்ளை புல்லாங்குழல் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை இசைத்தட்டு 8 30 அயிலூர் ஆர் கிருஷ்ணன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 திருக்கண்ணபுரம் எஸ் ஸ்ரீனிவாச பிள்ளை புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2 05 திருக்கண்ணபுரம் எஸ், ஸ்ரீனிவாசபிள்ளை புல்லாங்குழல் 2 15 கல்வி ஒலிபரப்பு 2-45 ஒலிபரப்பு முடிவு,

மாலை 5 அயிலூர் ஆர். கிருஷ்ணன் பாட்டு 5 40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 தாளவாத்தியக் கச்சேரி 7 30 தமிழில் செய்திகள் 7 45 சித்தூர் சுப்பிரமணியபிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 முசிரி சுப்ரமணிய ஐயர் இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 எச் எஸ் மத்வாச்சார் கோட்டுவாத்யம் 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 முடிவு.

புதன் அக்டோபர் 29

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 பி சக்ரபாணி பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்திகள் 8 15 ரேடியோ வாத்திகோஷ்டி 8 30 கே ஜோசப் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பி சக்ரபாணி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 பி சக்ரபாணி பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 அனந்தலக்ஷ்மி சடகோபன் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 தாயின் மோதிரம் நாடகம் 7 15 [illegible] இசைத்தட்டு 7 30 தமிழில் [illegible] 7 45 [illegible] கதம்பம் இசைத்தட்டு 8 கே ஜோசப் பாட்டு 8 0 அனந்தலக்ஷ்மி சடகோபன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 [illegible] சங்கீதம் இசைத்தட்டு 10 30 முடிவு.

## உண்மையே தெய்வம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

யுள்ளதையும் சுத்தப்படுத்த நேர்கிறது.

சுத்தப்படுத்தும் நெறி கடுமையானது. முற்றிலும் சுத்தநிலை அடைவதற்குச் சிந்தனையிலும், பேச்சிலும் செயலிலும் முற்றிலும் சுத்தனுயிருக்கவேண்டும். விருப்பு வெறுப்பு என்பவற்றினின்று மேனிலையை அடைய வேண்டும். ஓயாது முயன்றும் இந்த மூவகைச் சுத்தமும இன்னும் என்னிடம் இல்லை யென்பதை நான் அறிவேன். அதனால்தான் உலகத்தின் புகழ்ச்சி என்னை மகிழ்விப்பதில்லை. ஆனால் அது என்னை அடிக்கடி வருத்துகிறது. ஒருவன் உள்ளத்தில் உள்ள நுண்ணிய (காமக் குரோதிகளான) ஆசைகளை வெல்லுதல் படை வன்மையால் உலகத்தை ஸ்தூலமாக ஜெயித்தலைவிடக் கடினமானதென்று எனக்குத் தோனறுகிறது,

நான் இந்தியாவுக்குத் திரும்பி வந்தது முதல், என் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் ஆசைகளை அநுபவத்தில் அறிந்திருக்கிறேன். அவ்விஷயம் என்னைப்பணியுடையவனகச் செய்திருக்கிறது ஆனல் அவை என்னைத் தோல்வி யடைந்தவனுகச் செய்யவில்லை. எனது அநுபவங்களும் ஆராய்ச்சிகளும் எனக்குப் பெருங்களிப்பை அளித்திருக்கின்றன. ஆனுல் இன்னும் நெடுந்தூரம் கஷ்டமான பாதையில் நான் செல்லவேண்டியிருக்கிறது என்பதை நான் அறிவேன. நான் என்னைச் சூனியமாகவே செய்து கொள்ள வேண்டும். ஒருவன் தானுகவே, தனது சகோதர ஜீவர்களிடையே கடைசியானவனுகக் கருதி நடக்கும் வரை அவனுக்கு உய்வில்லை. அகிம்சையே அடக்கத்தின் இறுதியான எல்லையாகும்.

சிந்தையிலும் சொல்லினும், செயலினும் அகிம்சைநெறிபற்றி ஒழுகும் வரத்தை எனக்கு அருளுமாறு உண்மைக கடவுளை என்னுடன் சேர்ந்து வணங்குமாறு உங்களை வேண்டுகின்றேன்.

## NOTICE OF SALE
## கோட்டுக் கொம்மிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறையிலுள்ள யாழ்ப்பாண டிஸதிறிக் கோட்டில்

இல 2931 P

புலோலி மேற்கு கோணுமலைப்பிள்ளை கணபதிப்பிள்ளை வழக்காளி

எதிராக

புலோலி மேற்கு சின்னப்பு கிருஷ்ண பிள்ளையும்

2 வல்வெட்டி சின்னத்தம்பி சண்முகமும் எதிராளிகள்

இதன்பின்னுற் காணப்படும் ஆதனம் தத்துவம்பெற்ற வெந்தீஸ் மேஸ்தரும் கோட்டுக் கொம்மிஷனருமாகிய புலோலி மேற்கு வேலாயுதர் நாகலிங்கமாகிய என்னுல் கடன்ரூபா 2946 இன்னும் ரூபா 2500 க்கு 1947-ம் ஆண்டு வைகாசி ௴ 20 ந் தொடக்கம் 1947-ம் ஆண்டு ஆனி மாசம் 21 ந் திகதி வரைக்கும் ரூபா 100 க்கு 10 வீத வட்டிக்கும் அதன் மொத்தத் தொகையிலிருந்து ஆனி ௴ 21 ந் திகதி தொடக்கம் ரூபா 100 க்கு 5 வீத வட்டிக்கும் கோட்டுச் செலவு ரூபா 163 சதம் 42 ஐயும் அறவிடும்பொருட்டு 1947-ம் ஆண்டு கார்த்திகை மாசம் 29-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணியினிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோவிற்பற்று புலோலி மேற்கு மளவராய குறிச்சியிறை குஞ்சியார்சீமா நில. பா. 5 8/3 ஷை வீடு வ. எல்லை கிழக்கு கதிரவேலு பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கும் மேற்கும் ஒழுங்கை, தெற்கு சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ் வெல்லைக்குட்பட்ட நிலம்பனைகளிற் சொரியலாய் அரைவாசியும் கல்வீடு மண்வீடு கொட்டில்கள் நிந்தமாகவும்.

கு. வே. நாகலிங்கம்
கொம்மிசனர்

புலோலி மேற்கு
1947 ம் ஆண்டு ஐப்பசிமாசம் 13ந் திகதி
Mis 159 21.10-47

## அரிசி மா

சென்ற வியாழக்கிழமை மூன்று கப்பல்களில் 9700 தொன் அரிசியும் 9412 தொன் மாவும் கொழும்புக்கு வந்தன.


# கிருஷ்ணன் றாதுச் சருக்கவுரை

வில்லிபாரதம்—உத்தியோகபருவத்துள்ளதாகிய கிருஷ்ணன் றாதுச் சருக்கம், பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய பொழிப்புரை, சரித்திரத் தொடர்பு, நூலாசிரியர் வரலாறு என்னு மிவற்றுடன் யாழ்ப்பாணம் நாவலர் கலாசாலைத் தலைமையாசிரியர் வித்துவான் ந. சுப்பையபிள்ளை யவர்கள் எழுதிய விசேடக் குறிப்புரையுஞ் சேர்த்து ஐந்தாம் பதிப்பாக அச்சிட்டு வெளிவந்துள்ளது; இச் சருக்கத்திற் சில பாகம் இப்பொழுது தமிழ் ஆங்கில எஸ். எஸ். ஸீ. பரீட்சைக்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளன.

விலை 1 ரூபா 75 சதம் (ரூபா 1 அணு 12)

மனேஜர்
சைவப்பிரகாச யந்திரசாலை
யாழ்ப்பாணம்

வண்ணார்பண்ணை
20—10—47.


## பாராளுமன்ற அங்கத்தவர்க்குச் சிறைத் தண்டனை

இலங்கைப் பாராளுமன்றத்தில் அவிசாவலைத் தொகுதிப் பாதிநிதியாகவுள்ளமிஸ்ரர் பிலிப் குணவர்த்தன என்னும் சமசமாஜக் கட்சி அங்கத்தவர் சென்ற ஆனி மாதம் நிகழ்ந்த பொது வேலை நிறுத்தத்தின்போது தென்னிலங்கை டஸ கம்பனி நிலையத்துட் சென்று வேலைநிறுத்தம் செய்ய மறுத்த ஓர் பஸ் சாரதியைப் பயமுறுத்தினுர் என்று குற்றஞ் சாட்டப்பட்டுக் கொழும்பு நீதியதியால் 3 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். இத் தண்டனையை ஆட்சேபித்து மிஸ்ரர் குணவர்த்தனு உயர்தரநீதிமன்றத்துக்கு மனுச் செய்தார். சென்ற வாரம் உயர்தர நீதிமன்றம் மேற்படி வழக்கை விசாரணை செய்து, மிஸரர் பிலிப் குணவர்த்தனுவின் மநுவை நிராகரித்து. கீழ் நீதிபதி விதித்த தண்டனையை ஊர்ஜிதம் செய்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

ஆவி யின்றி யவர்மறி குற்றது
தேவ ராசான் றெரிந்து படருறுத்
தாவி லேர்கெழு சண்முக னவ்விடை
மேவி யாடும் வியப்பினை நோக்கினன்.

தேவகுருவாகிய வியாழன் (சில) தேவர்கள் உயிர்மாண்டு கிடப்பதை யுணர்ந்து பெருந்துயரடைந்து கெடுதலில்லாத அழகோடு கூடிய ஆறுமுக சுவாமி அந்த இடத்திலே திருவிளையாடல் செய்தலாகிய அற்புதத்தை அவதானித்தார் என்பது கருத்து.

அரிதில் உயிர்மாளும் இந்திரன் முதலிய தேவர்கள் முழுமுதற் கடவுளாகிய முருகமூர்த்தியோடு சமர்செய்யத் துணிந்தமையினாலன்றோ இன்று உயிர்மாண்டு கிடக்கின்றார்களென்பதை யெண்ணிய மாத்திரத்தே பெருந் துன்பமடைந்தார் தேவகுரு என்பார் "படருறு" என்றார். வியாழன் ஆங்கு வந்தபோதும் முருகமூர்த்தி ஒரு முகத்தோடு கூடிய பாலசுப்பிரமணிய மூர்த்தியாகவே விளங்கினரெனபது, அடுத்த திருவிருத்தத்தால் அறியக் கிடப்ப, இங்கே "சண்முகன் அவ்விடை, மேவியாடும் வியப்பினை நோக்கினன்" என்று சொல்லப்பட்டிருத்தல் என்னையோவெனின், சண்முகத் தெய்வமே இத்திருவிளையாடல்களைச் செய்கிறாரென முன்னர் நாரதமுனிவர் வியாழனுக்குச் சொன்னமையினாலும், இந்திரன் முதலிய தேவர்கள் போலாது, "முழுதுணர்ந்திடுமொய் சுடர்ப்பொன்னவன்" ஆதலாலும் வியாழபகவான் முருகவேள்கொண்ட கருணைகூர் முகங்களாறையுங் கண்டாரென்க. (64)

முழுது ணர்ந்திடு மொய்சுடர்ப் பொன்னவன்
எழுதொ ணாத வெழினலந் தாங்கியோர்
குழவி தன்னுருக் கொண்ட குமரனைத்
தொழுது நின்று துதித்திது சொல்லுவான்.

சிறந்த ஞானத்தோடு கூடியவரும் மிக்க ஒளிபொருந்திய பொன்மயமான தேகத்தையுடையவருமாகிய வியாழப்புத்தேள், சித்திரித்தற்கரிய பேரழகுகொண்டு ஒப்பற்ற பாலசுப்பிரமணிய மூர்த்தியாய் விளங்கும் அக் குமாரக்கடவுளை வீழ்ந்து வணங்கி யெழுந்து விநயத்தோடு நின்று தோத்திரம் பண்ணிப் பின்வருமாறு விண்ணப்பஞ் செய்வாராயின ரென்பது கருத்து.

முதனூலிலே முருகக்கடவுளை வியாழன் துதித்தனவாகிய பல சுலோகங்கள் சொல்லப்பட்டிருத்தலின் ஆசாரிய சுவாமிகள் விரிவஞ்சிப்போலும், அத்தோத்திரங்களை யெடுத்துக் கூறாது "துதித்து" என மாத்திரங் கூறியுள்ளார். இங்ஙனம் கூறினரேனும் முருகமூர்த்தியின் அருட்பிரபாகத்தையும் பரத்துவத்தையும் வியாழபகவான் வரக்காக அடுத்துவருந் திருவிருத்தங்களில் ஆசாரிய சுவாமிகள பாடியுள்ளாரென்பது புலப்படுமென்க. (65)

கரியரி முகத்தவன் கடிய சூரனென்
றுரைபெறு தானவ ரோறுப்ப வல்கலும்
பருவர லுழந்துதன் பதிவிட் டிப்பெரு
வரையிடை மகபதி மறைந்து வைகினன்.

யானைமுகத்தினை யுடையவனாகிய தாரகன் சிங்கமுகன் தறுகண்மையுடைய சூரபன்மன் என்று சொல்லப்படும் அசுரர்கள் துன்பஞ்செய்ய இந்திரனானவன் தினமும் துன்பத்தை யனுபவித்துத் தனக்குரியதாகிய பொன்னுலகத்தை விட்டகன்று இந்தப் பெரிய மேருமலையின் கண்ணே (வந்து) ஒளித்திருக்கின்றா னென்பது கருத்து.

கரியெனபதனோடு முகத்தவனென்பதையுங் கூட்டி யானைமுகத்தை யுடையவனாகிய தாரகன் எனக் கொள்ளப்பட்டது. வன்மை தறுகண்மை சூரத்துவம் முதலியவற்றில் அதிகனானமையின் கடிய சூரன் என்றார்; கடியெனனுஞ் சொல் அச்சம் உக்கிரம் கொடுமை சிறப்பு முதலிய பல பொருள் குறிக்கும்; அல்கலும் - நாள்தோறும் இந்நிகழ்ச்சிகள் நேர்தற்கிடமாயுள்ள இடம் மேருமலையே யாதலின் இப்பெருவரை என்றார்.

இதுமுதற் பன்னிரு திருவிருத்தங்கள் இந்திரன் முதலிய சில தேவர்கள் அபுத்தி பூர்வமாகச் செய்த பிழையைப் பொறுத்து அவர்களுக்கு இன்னருள் புரியும் வண்ணம் தேவகுருவாகிய வியாழன் அத்தேவர்கள் பொருட்டு முருகக்கடவுளை இரந்தவாறும்; இத்திருவிருத்தங்கள் படிப்போர் கேட்போ ரெவருள்ளத்தையும் உருக்குமியல்பின; இங்ஙனமாதலின் மூத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைக்கும் தமிழ்த்தனித் தெய்வமாகிய முருகவேள் திருவுளத்தை உருகச்செய்யு மென்பது புதுமையாகாது; மேலும் எவரேனும் தாம் தாம நேரில் வணங்கியிரந்தாற்றான் முருகவேள் அருள்புரிவரென்ற நியதியில்லை யென்பதும், ஒருவர் தம்மோடு தொடர்புடையவர்க்கு அருள்புரியவேண்டு மெனக் கந்தவேளை வந்தனை செய்யினும் அத்தொடர்புடையார்க்கு அப்பெருமான் அருள் செய்வரென்பதும் பெறப்படலாயின; என்? தேவகுரு முருகக்கடவுளை யிரந்தமை தமக்கருள்செய்யும்வண்ணமல்ல, தம் சீடர்களாகிய இந்திரன், முதலாம் தேவர்கட்கு அருள் செய்விக்கும் பொருட்டாதலினென்க; இக்கொள்கைபற்றியே இக் காலத்திலும் அன்பர்கள் தமக்கு மாத்திரமன்றித் தம் மனைவி மக்கள் முதலாந் தொடர்புடையார்க்கும் அநுக்கிரகஞ் செய்தருளவேண்டு மெனச் சிந்தித்துக் கந்தக் கடவுளை வந்தனைசெய்து வருகின்றனர். மூப்பத்துமுக்கோடி தேவர்கட்கும், சுவர்க்கமத்தியபாதலமென்னும் மூன்று உலகங்களுக்கும் இறைவனாகிச் சகல செல்வங்களோடும் அதிகாரத்தோடு மிருந்த இந்திரன் இப்பொழுது தாரகன் சிங்கன் சூரன் முதலிய கொடிய அசுரர்கள் செய்த துன்பங்களைச் சகிக்கலாற்றானாய், தன்னுடை செல்வம் அதிகார மெல்லாவற்றையும் இழந்து இப்பூவுலகத்திற்கு ஓடிவந்து, இங்குள்ள மேருமலையிலே, வெளிப்படையாக இருத்தற்குப் பயந்து ஒளித்திருக்கிறான், சுவாமீ, சிந்தை கலங்கிய இந்த நிலைமையிலுள்ள இந்திரனுக்குப் புத்தி சுவாதீனமாகவிருக்க மாட்டாது; தடுமாற்றத்தினாலேதான் சுவாமீ தேவரீருக்கு அந்த இந்திரனும் இன்னுஞ் சில தேவர்களும் அபராதஞ் செய்தார்கள்; நல்ல அறிவோடிருந்தால் எம்பெருமானே! ஒருபோதும் பிழைசெய்யமாட்டார்கள் என வியாழன் சமாதானங் கூறுகின்றார். (66)

## நவம்பர் 25

### அடுத்த பாராளுமன்றக்கூட்டம்

இலங்கைப் பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டம் வருகிற நவம்பர் மாதம் 25-ம் திகதி கூடும் என்றும், அதற்கான அறிவிப்பு தேசாதிபதியால் பகிரங்கமாகச் செய்யப்படும் என்றும் ஓர் செய்தி கூறுகிறது.

இதற்கிடையில் எதிர்க் கட்சியினரால் எடுத்தாளப்படும் என்றிருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கைவிடப்படும் என்றும் ஓர் செய்தி கூறுகிறது. பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் சபைத் தலைவர் தெரிவு, மிஸ்ரர் சேனநாயக்காவிற்குப் போதிய பலம் இருக்கிறதென்பதைக் காட்டிவிட்டதாகையால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இப்போது எடுத்தாள்வதால் பயன்கிடைக்காது என்று எதிர்க்கட்சிப் பிரமுகர் பலர் கருதுவதாகத் தெரிகிறது.

## இலங்கை - இந்தியப் பிரச்சினை

### டிசெம்பரில் பேச்சுக்கள் நடைபெறும்

வருகிற டிசெம்பர் மாதம் அல்லது ஜனவரியின் முதற்பகுதியில், இலங்கை - இந்தியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இலங்கை யரசாங்கத்தின் கோஷ்டி ஒன்று புது டெல்கிக்குச் செல்லும் என்று அறியக் கிடக்கின்றது. இக்கோஷ்டிக்குப் பிரதம மந்திரி மிஸ்ரர் சேனநாயக்காவே தலைமை வகிப்பார் என்றும், மிஸ்ரர் பண்டார நாயக்கா அதில் ஓர் அங்கத்தவராக இருப்பர் என்றும் தெரிகிறது.

அரசாங்கத் தூதுக்கோஷ்டி புது டெல்கிக்குப் போகும்போது, இலங்கை இந்தியக் காங்கிரசும் ஓர் தூதுக் கோஷ்டியை அனுப்ப நிச்சயித்திருக்கிறது. இக் கோஷ்டிக்குக் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ சௌமியமூர்த்தித் தொண்டைமான் தலைமை வகிப்பர்.


# அடைவு நகை விற்பனவு விளம்பரம்

1892-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் தொல்புரம் 9247/66L நம்பர் இராமலிங்கம் துரையப்பா, அவர்களிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 1?-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

| இல. | தே | மீ | ரூ. | ச. | பெயர் ஊர் அடைவு விபரம் |
|---|---|---|---|---|---|
| | | | | | 1943-ம் ஆண்டு |
| 1941 | 2 | 8 | 20 | 00 | கந்தர் முருகேசு பொன்னாலை குப்பிக்கடுக்கன் சோடி 1 |
| 2199 | 22 | 9 | 250 | 00 | செ. கனகரத்தினம் சித்தங்கேணி கொலிசுக்காப்பு சோடி 1 |
| 2507 | 18 | 11 | 12 | 00 | க. சம்பந்தர் சங்கானை தாலி 1 |
| | | | | | 1944-ம் ஆண்டு |
| 3404 | 21 | 5 | 95 | 00 | கே. குமாரசாமி மூளாய் அட்டியல் 1 |
| 3502 | 12 | 6 | 160 | 00 | சி. மாணிக்கம் சங்கானை மேற்கு தாலிக்கொடி 1 |
| 3534 | 19 | 6 | 10 | 00 | நாகர் வேலுப்பிள்ளை வட்டுக் கிழக்கு தாலி 1 |
| 3543 | 9 | 7 | 180 | 00 | சி. சபாபதிப்பிள்ளை தொல்புரம் காப்புச் சோடி 1 |
| 3699 | 22 | 7 | 150 | 00 | த. செல்வநாயகம் சித்தங்கேணி காப்புச் சோடி 1 |
| 3951 | 15 | 9 | 320 | 00 | செ. கனகரத்தினம் சித்தங்கேணி டலர் 1 மேல்வேலையுடன் |
| 3959 | 16 | 9 | 400 | 00 | பூ சுப்பிரமணியக்குருக்கள் தொல்புரம் பென்றன் சங்கிலி 1 |
| 3991 | 24 | 9 | 15 | 00 | செ. கனகரத்தினம் சித்தங்கேணி மோதிரம் 1 |
| 4003 | 1 | 10 | 100 | 00 | சி. சபாபதிப்பிள்ளை தொல்புரம் சி. பதக்கம் சங்கிலி 2 |
| 4015 | 5 | 10 | 50 | 00 | த செல்வநாயகம் சித்தங்கேணி மோதிரம் 2 |
| 4149 | 29 | 10 | 50 | 00 | வ. நாகலிங்கம் நெல்லியான் சிறுகாப்புச் சோடி 1 |
| 4179 | 6 | 11 | 10 | 00 | க. மார்க்கண்டு தொல்புரம் சிறு காப்புச் சோடி 1 |
| 4341 | 25 | 12 | 17 | 00 | வ. முருகேசு சுளிபுரம் மோதிரம் 1 |
| | | | | | 1945-ம் ஆண்டு |
| 4618 | 1 | 3 | 450 | 00 | செ சிவப்பிரகாசம் சித்தங்கேணி வளைசல் சோடி 1 |
| 4657 | 10 | 3 | 24 | 00 | நாகர் சின்னத்தம்பி சுளிபுரம் மோதிரம் 1 |
| 5079 | 13 | 6 | 30 | 00 | இளையவி மார்க்கண்டு சித்தங்கேணி குண்டுச்சங்கிலி 1 |
| 5107 | 19 | 6 | 10 | 00 | இ. ஆறுமுகம் தொல்புரம் மோதிரம் 1 |
| 5132 | 25 | 6 | 35 | 00 | சி. கந்தையா சுளிபுரம் மோதிரம் 1 |
| 5293 | 29 | 7 | 35 | 90 | ச. நடராசா தொல்புரம் காப்பு 1 |
| 5518 | 21 | 9 | 395 | 00 | செ. சிவப்பிரகாசம் சித்தங்கேணி பதக்கம்சங்கிலி அட்டியல் 1 |
| 5519 | 21 | 9 | 155 | 00 | ,, ,, காப்புச் சோடி 2 |
| 5520 | 21 | 9 | 406 | 00 | ,, ,, வயிரக்காப்பு சோடி 1 |
| 5543 | 27 | 9 | 125 | 00 | ,, ,, தொங்கட்டான் சோடி 1 |
| 5618 | 15 | 10 | 120 | 00 | செ. கிருஷ்ணபிள்ளை சுளிபுரம் கொடி 1 |
| 5655 | 24 | 10 | 15 | 00 | செ. சிவப்பிரகாசம் வட்டு கிழக்கு தூக்கணம் சோடி 1 |
| 5693 | 29 | 10 | 150 | 00 | சி. செல்லத்துரை சங்கரத்தை சிந்தாமணி சங்கிலி 1 |
| 5814 | 17 | 11 | 100 | 00 | வே. கந்தசாமி வட்டு மேற்கு ½ டலர் மேல்வேலையுடன் |
| 5852 | 24 | 11 | 10 | 00 | க. வயிரமுத்து மூளாய் தாலி 1 |
| | | | | | 1946-ம் ஆண்டு |
| 6030 | 2 | 1 | 40 | 00 | பொ. நாகரத்தினம் தொல்புரம் பெட்டி மோதிரம் 1 |
| 6226 | 1 | 2 | 55 | 00 | சி. சபாபதி தொல்புரம் சங்கிலி 1 |
| 6264 | 7 | 2 | 125 | 00 | சின்னப்பு நவரத்தினம் வட்டுக்-கிளக்கு காப்பு சோடி 1 மோதிரம் 1 |
| 6434 | 9 | 3 | 17 | 00 | க. சிவபாதசுந்தரம் சித்தங்கேணி மோதிரம் 1 |
| 6489 | 20 | 3 | 80 | 00 | செ. அன்னப்பிள்ளை சுளிபுரம் பென்ரன் 1 மோதிரம் 1 |
| 6563 | 8 | 4 | 150 | 00 | வே. முத்துக்குமாரு சுளிபுரம் காப்பு சோடி 1 |
| 6580 | 10 | 4 | 275 | 00 | மு பண்டாரி சுளிபுரம் தாலிக்கொடி 1 |
| 6607 | 16 | 4 | 40 | 00 | நாகன் வேலன் சுளிபுரம் சி. கல் காதோலை சோ 1 |
| 6673 | 26 | 4 | 15 | 00 | க பூபாலசிங்கம் நெல்லியான் மோதி 1 |
| 6738 | 11 | 5 | 200 | 00 | சின்னத்தம்பி செல்லத்துரை சங்கரத்தை பத அட்டி 1 |
| 6746 | 13 | 5 | 640 | 00 | சு. கந்தசாமி சுளிபுரம் பெ. சங்கிலி 1 காப்பு சோடி 1 சங்கிலி 1 |
| 6785 | 21 | 5 | 150 | 00 | ஆறுமுகம் சின்னத்துரை மூளாய் முறிந்த காப்பு சோ 1 |
| 6857 | 3 | 6 | 80 | 00 | சின்னத்தம்பி செல்லத்துரை சங்கரத்தை தாலிக்கொடி 1 |
| 6938 | 16 | 6 | 350 | 00 | வி. ஜேம்ஸ அப்புகாமி சங்கரத்தை தாயத்துச் சங்கிலி 1 |
| 6953 | 19 | 6 | 20 | 00 | இளையதம்பி இராமலிங்கம் சித்தங்கேணி காதோ சோ 1 |
| 7033 | 3 | 7 | 20 | 00 | மு. கந்தையா சுளிபுரம் சிறுகாப்புச் சோடி 1 |
| 7068 | 10 | 7 | 50 | 00 | ந. மீனாட்சிப்பிள்ளை சுளிபுரம் குண்டுடன் தங் பவுண் 1 |
| 7275 | 21 | 8 | 80 | 00 | சுப்பிரமணியம் கந்தசாமி சுளிபுரம் கைச்சங்கிலி 1 |

விற்பனவு 23—11—47 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் எடுபட்ட நகை பிறநீங்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

20—10—47

R. SATGURU,
Auctioner.

M. S. 103. 21, 28-10-47.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாவலப்பிட்டி இந்துவாலிபர் சங்கம்

மேற்படி சங்க ஆதரவில் 15-10.47 வரை நவராத்திரி பூசை நடைபெறுகிறது தெரிந்தெடுத்த 10 அன்பர்கள் வீட்டில் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு வீடாக அன்பர்கள் பலர் சென்று ஒன்று சேர்ந்து விசேட பிரார்த்தனை, பூசை, அர்ச்சனை என்பன செய்து வருகின்றனர்.

—கடித

### திருத்திக்கொள்க

சென்ற செப்டெம் மாசம் 26-ந் தேதி வெளிவந்த இந்துசாதனம் 5-ம் பக்கத்துள்ள தேகவியோகக் குறிப்பில் "S. M, பொன்னையா" என இருக்கவேண்டியது தவறுதலாக S. M. கந்தையா என வெளிவந்ததையிட்டுப் பச்சாத்தாபப்படுகிறேம்.

—பத்திராதிபர்.


மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

## கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச்செலவு எல்லாம் உட்பட நாகபட்டனமிருந்து பினுங் செல்ல டெக் ரிக்கற் ரூபாய் 130 க்கு எங்கள் மூலமாக பெற்றுக் கொள்ளலாம்

**வேறு செலவு உங்களுக்கு இல்லை**

பல நூற்றுக்கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ்செய்து திருப்தியடைந்து கொடுத்த நற்சாட்சிகள் அநேகம் உண்டு.

**வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறேம்**

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,
252, காங்கேசன்துறைரேட்
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தந்தி (Srivel)
பிராஞ்சு: நாகபட்டணம்.

Std 33 2—9—47&28.2 48



## பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களுந்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருரூத்தல் விலை ரூபா 25
அரைரூத்தலுக்கு ரூபா 12-50
கால்ரூத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48



## கந்தசாமி வைத்தியர்
### அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் ருத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பி. யில் அனுப்புவோம்.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்
— வல்வெட்டித்துறை —

Std 25 1-7-47—30-6-48 (ஜ)



## கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பினுங் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:

எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரேட் யாழ்ப்பாணம்
[வின்சர்-வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—6-6-48



## இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

### இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்வின் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிலேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

(Std.29 1-8—30-7-48)



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிருதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
பிரப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Tuesday, October 21, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org